Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    மார்கழி 15    (30-12-1992)    புதன்கிழமை    ஓசை 816

## ஆண்டு ஒன்று பாடவிதானம் முற்றாக மாற்றியமைப்பு

ஆரம்பப் பாடசாலை ஆண்டு ஒன்று மட்டத்தில் இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்த பாடவிதானம் முற்றாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. தேசியக் கல்வி நிறுவன ஆரம்பக் கல்வித்துறை வெளியிட்டுள்ள இப் புதிய பாடத்திட்டம் 1993 இல் இருந்து ஆண்டு ஒன்றில் அமுலாக்கப்படவுள்ளது. இப்பாடவிதானம் சுற்றாடலில் பிள்ளைகள் பெறும் முதற்படி அனுபவங்கள் மூலம் கற்றுக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. எல்லாப் பிள்ளைகளும் சமச்சீராகக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற விதத்தில் அமையாது, பிள்ளைகளின் வெவ்வேறு திறமைகளுக்கும், நோக்குகளுக்கும் பொருந்தியவாறு (4ஆம் பக்கம் பார்க்க)

# புனானையில் அதிரடி; 5 இராணுவத்தினர் பலி

## புலிகள் தரப்பில் சேதமில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவ ரோந்து அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் ஒன்றில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். பல ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

மட்டக்களப்பு புனானை இராணுவ முகாமிலிருந்து வாகனேரி இராணுவ முகாமிற்கு ரோந்து சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீதே விடுதலைப் புலிகள் இவ் வெற்றிகர தாக்குதலை மேற்கொண்டனர்

நேற்று காலை பத்து மணியளவில் புனானை இராணுவ முகாமிலிருந்து 150 யார் தூரத்தில் வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டது. 15 பேர் கொண்ட இராணுவ அணி மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது ஐந்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகினர். ஏனையோர் அருகிலுள்ள முகாமிற்குத் தப்பி ஓடிவிட்டனர்.

இவ் வெற்றிகர தாக்குதலில் போராளிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை என்பதுகுறிப்பிடத்தக்கது.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புனானையில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

- ★ ஏ.கே.எல்.எம் ஜி — 01
- ★ ரி-56-2ரக துப்பாக்கி — 02
- ★ ரி-81 - 1 ரக துப்பாக்கி — 02
- ★ ஏ.கே.எல்.எம் ஜி ரம் மகசின் — 05
- ★ ஏ.கே எல்.எம் ஜி லிங் — 48
- ★ ரி-56 மகசின் — 07
- ★ ரி-81 மகசின் — 08
- ★ நடுத்தர ரவைகள் — 1045
- ★ ரி-81 ரைபிள் கிரனைட் — 02
- ★ ஜே ஆர் கைக்குண்டு — 01
- ★ ஏ.கே கோல்சர் — 04
- ★ இராணுவப்பட்டி — 02
- ★ கிட்பாக் — 05
- ★ தொப்பி — 02
- ★ மழை கவச அங்கி — 03

### நத்தார் தினத்தன்று

# யுத்தநிறுத்தம் செய்திருப்பின் இழப்பை தவிர்த்திருக்கலாம்

## -மதத்தலைவர்கள் கருத்து

"நத்தார் புதுவருடதினத்தில் அரச யுத்த நிறுத்தத்தை செய்திருந்தால் பண்டிகைக் காலத்திலாவது ...

கருத்து ; வெளியிட்டுள்ளனர்.

கடந்த 24ஆம் திகதி ... லங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டசம்பவம் குறித்து



அண்மையில் கொழும்பில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் கண்கள் கட்டப்பட்ட நிலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் கூட்டிச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம்.

### வீரச்சாவு



மேஜர் தமிழேந்தி
[கோபி]

### சமாதானத்திற்கெதிரான

# சிங்களவரின் வெகுளித்தனம் இலங்கையைத் துண்டாடும்

## பிரேமாவின் ஆலோசகர் எச்சரிக்கை

சிங்களவரின் சமாதானத்திற்கு இணங்காத போக்கும், வெகுளித்தனமும் தான் அவர்களுக்கு பரம எதிரிகளாக உள்ளன. இந்த இரண்டு அம்சங்களும் விடுதலைப்புலிகள் இதுவரை செய்யத் தவறிய நாட்டைத் துண்டாக்கும் முயற்சியைத் சாத்தியமாக்கி விடும் என்று ஒப்சேபர் பத்தி எழுத்தாளர் அனுருத்த திலகசிறி எழுதியுள்ளார்.

வரலாற்றில் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களால் புரட்சி அலைத்தை ஏற்றுக் கொள்ளாத தன்மையும், அடும் போக்கும் அழிவுக்கு வழிகோலியுள்ளன. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் குடியரசுவாதிகள் கோரிக்கைக்கு இங்கிலாந்து முடி விட்டுக் கொடுத்ததால் இங்கிலாந்து ஆட்சி தப்பிப் பிழைத்தது. பிரான்சு நாட்டின் அடும்போக்கினால் அங்கு பூர்போன் ஆட்சி கவிழ்ந்தது. தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகள் சதிகாரத்தன்மை கொண்டவை என்று கட்டுப்படுத்தல் காலப்போக்கில் கிளர்ச்சிக ... செல்லும். இவ்வாறு அவர் தமது பத்தியில் எழுதியுள்ளார்

அனுருத்த திலகசிறி தொடர்ந்து எழுதுகையில்:

கியூபாப் புரட்சிக்குப் பிறகு லத்தின் அமெரிக்க நாடுகளில் அமெரிக்கா பஞ்சம் பசியைப் போக்குவதிலும் மற்றும் சமூகத் துயர் துடைக்கும் பணியில் ஈடுபட்டது. அமெரிக்கா அடக்கு முறையில் இறங்கியிருந்தால் உலகில் பலம்பொருந்திய நாடான அமெரிக்கா அந்தப் பணியைச் செய்ய முடியாமல் திணறியிருக்கும். சில நாடு

மட்டக்களப்பு புனானையில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ | ஏ.கே.எல்.எம் ஜி | — 01 |
| ★ | ரி-56-2ரக துப்பாக்கி | — 02 |
| ★ | ரி-81 - 1 ரக துப்பாக்கி | — 02 |
| ★ | ஏ.கே.எல்.எம் ஜி ரம் மகசின் | — 05 |
| ★ | ஏ.கே எல்.எம் ஜி லிங் | — 48 |
| ★ | ரி-81 மகசின் | — 08 |
| ★ | நடுத்தர ரவைகள் | — 1045 |
| ★ | ரி-81 ரைபிள் கிரனைட் | — 02 |
| ★ | ஜே ஆர் கைக்குண்டு | — 01 |
| ★ | ஏ.கே கோல்சர் | — 04 |
| ★ | இராணுவப்பட்டி | — 02 |
| ★ | கிட்பாக் | — 05 |
| ★ | தொப்பி | — 02 |
| ★ | மழை கவச அங்கி | — 03 |

நத்தார் தினத்தன்று

# யுத்தநிறுத்தம் செய்திருப்பின் இழப்பை தவிர்த்திருக்கலாம்

## -மதத்தலைவர்கள் கருத்து

''நத்தார் புதுவருடதினத்தில் வரை யுத்த நிறுத்தத்தை செய்திருந்தால் பண்டிகைக் காலத்திலாவது படையினரது பாரிய உயிரிழப்புக்களைத் தவிர்த்திருக்க முடியும்'' இவ்வாறு சமயத்தலைவர்கள்பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கடந்த 24ஆம் திகதி கொக்குத்தொடுவாய் மணலாறில் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் சுமார் 42 சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டசம்பம் குறித்து கருத்து வெளியிடும்போதே பல மதத்தலைவர்கள் இவ்வாறு கூறியிருக்கின்றனர்.

## ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து வலி மேற்குப் பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் 9 30மணியளவில் மேற்படி பகுதிகளில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள்

[4-ம் பக்கம் பார்க்க]

## பஸ்விபத்து 3 பேர் பலி; 40 பேர் காயம்

வலப்பனை பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பஸ் விபத்தில் சிக்கி மூவர் உயிரிழந்திருப்பதுடன் நாற்பது பேர்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## பாரிய கடற்படைக் கப்பல் பீரங்கித் தாக்குதல்

(வடமராட்சி)

சிறிலங்கா கடற்படையினருக்குச் சொந்தமான பாரிய கப்பலில் இருந்து மீனவர்கள் நோக்கி மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலினால் வல்வெட்டித்துறை.பொலிகண்டி, ஊரிக்காடு, கடற்பிராந்தியம் ஒரு மணித்தியால நேரம் அதிர்ந்தது.

நேற்று காலை 6.45 மணியளவில் பருத்தித்துறைப்பகுதியிலிருந்து தொண்டமனாறு பகுதியை நோக்கி ரோந்து சென்ற ''வீரயா சூரையா'' என்ற பாரிய கப்பல் திடீரென மீனவர்கள் மத்தியில் எதிர்ப்பட்டதும் 50 கலிபர் தாக்குதலுடன் பீரங்கித் தாக்குதலையும் மேற்கொண்டது. இதனால் மீனவர்களது சில மடிவலைகள் கடலில் கைவிடப்பட்டும், சில படகுகள் சேதமடைந்துமுள்ளன.

பீரங்கித் தாக்குதலினால் இழுவைப்படகுகள் மற்றும் எஞ்ஜின் படகுகளுடன் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த நூற்றுக்கு மேற்பட்ட மீனவர்கள் தமது மீன்பிடி மூலவளங்களை கைவிட்ட நிலையில் நீந்திக் கரை சேர்ந்தனர்.

கடலில் பீரங்கித் தாக்குதல் வேகம் தணிந்த பின்னர் மீனவர்கள் தமது மீன்பிடி உப

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# விமானங்கள் விற்பனை செய்ய பிரிட்டன், பிரான்ஸ் மறுப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசு கொள்வனவு செய்ய உத்தேசித்திருக்கும் ''புக்காரா'' எம். ஐ. 58 ரக விமானங்களை சிறிலங்காவுக்கு விற்பனை செய்வதற்கு பிரிட்டனும், பிரான்சும் மறுத்துவிட்டன எனவும் இந்நாடுகளிடமிருந்து இவ் வானூர்திகளைக் கொள்வனவு செய்யும் முயற்சி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்தே ரஷ்யாவில் இருந்து எம். ஐ 8 ரக உலங்கு வானூர்திகளையும், ஆர்ஜெனடீனாவில் இருந்து ஏ. ஐ - 58 ரகத்தைச் சேர்ந்த விமானங்களையும் கொள்வனவு செய்வதற்கு முடிவு செய்யப்பட்ட துஎனவும்பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

பிரிட்டனில் இருந்து மேற்படி விமானங்களைக் கொள்வனவு செய்ய முயற்சிக்கப்பட்ட சமயம் இலங்கையில் கடமையாற்றிய பிரிட்டிஷ் தூதுவர் திரு. கிளாஸ்டன் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்ட விவகாரம் தடையாக இருந்தது.

இதனைத்தொடர்ந்து பிரான்சில் இருந்து இவ்விமானங்களை கொள்வனவு செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டது எனினும் பிரான்ஸ் நாட்டின் தீர்மானங்களை மேற்கொள்ளும் ''இன்ரர் மினிஸ்டியர்'' அமைப்பு மேற்படி விமானங்களை சிறிலங்கா அரசுக்கு விற்பனை செய்வதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டது இதனால் சிறிலங்கா அரசின் மேற்படி முயற்சிகள் தோல்வியடைந்தன. இதைத் தொடர்ந்து மேற்படி விமானங்களைக் கொள்வனவு செய்வதற்காக கேள்விப்பத்திரங்களைக் கோருவதற்கு அரசு முடிவு செய்தது'

கேள்விப்பத்திரங்களின் அடிப்படையிலேயே தற்பொழுது ரஷ்யாவிலிருந்தும், ஆர்ஜென்டீனா விடமிருந்தும் மேற்படி வானூர்திகளைக்

(4-ம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



மேஜர் தமிழேந்தி [கோபி]



கப்டன் தோன்றல் [விபுலன்]



லெப். விதூர்சன்

திருமலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் போராளிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் இரண்டு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்த மேஜர் தமிழேந்தி/கோபி(கதிரவேலுப்பிள்ளை காளியப்பு மேற்கு கொலனி தம்பலகமம், திருமலை), கப்டன் தோன்றல்

[4-ம் பக்கம் பார்க்க]

# இலங்கையைத் துண்டாடும்

## பிரேமாவின் ஆலோசகர் எச்சரிக்கை

சிங்களவரின் சமாதானத்திற்கு இணங்காத போக்கும், வெகுளித்தனமும் தான் அவர்களுக்குப் பரம எதிரிகளாக உள்ளன. இந்த இரண்டு அம்சங்களும் விடுதலைப்புலிகள் இதுவரை செய்யத் தவறிய நாட்டைத் துண்டாக்கும் முயற்சியைத் சாத்தியமாக்கிவிடும் என்று ஒப்சேபர் பத்தி எழுத்தாளர் அனுருத்த திலகசிறி எழுதியுள்ளார்.

வரலாற்றின் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களால் புரட்சி அலைகளும் கிளர்ச்சிகளும் ஒய்ந்துள்ளன. மாறாகச்சமாதானத்தை ஏற்றுக் கொள்ளாத தன்மையும், கடும் போக்கும் அழிவுக்கு வழிகோலியுள்ளன. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் குடியரசுவாதிகள் கோரிக்கைக்கு இங்கிலாந்து முடி விட்டுக்கொடுத்ததால் இங்கிலாந்து ஆட்சி தப்பிப் பிழைத்தது. பிரான்ச நாட்டின் கடும்போக்கினால் அங்கு பூர்போன் ஆட்சி கவிழ்ந்தது. தொழிற் சங்கங்களின் நடவடிக்கைகள் சதிகாரத்தன்மை கொண்டவை என்று கட்டுப்படுத்துதல் காலப்போக்கில் கிளர்ச்சிகளுக்கும், தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கும் தான் இட்டுச்செல்லும். இவ்வாறு அவர் தமது பத்தியில் எழுதியுள்ளார் அனுருத்த திலகசிறி தொடர்ந்து எழுதுகையில்:

கியூபாப் புரட்சிக்குப் பிறகுதான் அமெரிக்க நாடுகளில் அமெரிக்கா பஞ்சம் பசியைப் போக்குவதிலும் மற்றும் சமூகத் துயர் துடைக்கும் பணியில் ஈடுபட்டது. அமெரிக்கா அடக்கு முறையில் இறங்கியிருந்தால் உலகில் பலம்பொருந்திய நாடான அமெரிக்கா அந்தப் பணியைச் செய்ய முடியாமல் திணறியிருக்கும். சில நாடுகளில் ஆளும் வர்க்கங்கள்,

(4-ம பக்கம் பார்க்க)

## ரோந்து சென்ற அதிகாரி கிணற்றில் வீழ்ந்து மரணம்

[திருக்கோணமலை]

மொரவேவ பகுதியில் இரவு நேர ரோந்து சென்று கொண்டிருந்த விமானப்படை அதிகாரி ஸ்குவாட்ரன் டபிள்யூ. எம். விஜிதகுமார பாழடைந்த கிணறொன்றில் வீழ்ந்து மரணமானார் என தெரிவிக்கப்படுகிறது.

இவர் சென்ற வாரம் மொரவேவ முதலாம் முகாமிலிருந்து பிரதான முகாமிற்கு இரவு 7.00 மணியளவில் தனது அணியினருடன் ரோந்து செல்ல புறப்பட்டதாகவும் ஆனால் பிரதான முகாமை இவ் அணியினர் அடைந்த போது இந்த அதிகாரியைக் காணவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து இவ் அதிகாரியை தேடிவந்த குழுவினர் அவரது சடலத்தை அழியிலுள்ள பாழடைந்த கிணற்றில் கண்டுபிடித்தனர் என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜன. 20க்கு முன் ஹெலிகள் வரும்

[கொழும்பு]

சிறிலங்கா அரசினால் கொள்வனவு செய்யப்பட்ட ஹெலி கொப்ரர்கள் ஜனவரி 20-ம் திகதிக்கு முன் சேவையில் ஈடுபடுத்தப்படும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இவை அடுத்த மாதம் 20-ம் திகதிக்கு முன் இங்கு வந்து சேரும் எனவும் வடக்கு-கிழக்கில் யுத்தத்தில் ஈடுபடும் படையினருக்கு இவை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்ஹெலிகள்வந்ததும்படையினர் தமது கடமைகளைத் தடையின்றி மேற்கொள்வர் எனவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## பட்டப்பின் படிப்பு பரீட்சை முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக பட்டப்பின படிப்புக் கல்வி டிப்ளோமா பரீட்சை 1991 முழுநேர, பகுதிநேர பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

முழுநேர பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சையில் மூவர் விசேட சித்தியையும் ஒருவர் திறமைச் சித்தியையும் இல் பத்துமூன்றுபேர்சாதாரணசித்தியும் அடைந்துள்ளனர். மேற்படி பரீட்சையில் மனுவேல்பிள்ளை, செல்வி கே. பொன்னுத்துரை, செல்வி கே. ராஜதுரை ஆகியோர் விசேட சித்தியடைந்துள்ளனர், திரு. ரி. பங்கயற்செல்வன் மெரிற் சித்தியடைந்துள்ளார். பகுதிநேர பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா பரீட்சையில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நியமனக் கடிதம்

[கொழும்பு]

வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த எண்ணூறு பட்டதாரிகளுக்கு இன்றைய தினம் ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது. வடமாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு

[4 ஆம் பக்கம் பார்க்க)

# கைதிகள் போல் வாழும் இலங்கை தமிழ் அகதிகள்

## - இந்திய அதிகாரி தெரிவிப்பு

(சென்னை)

இந்தியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகளில் ஆயிரக்கணக்கானோர் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள அகதி முகாம்களில் சிறைக் கைதிகள் போல வாழ்ந்து வருவதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திருக்கோணமலையிலிருந்து கிடைக்கும் செய்திகளின்படி பெருந்தொகையான அகதிகளை மீளக்குடியமர்த்துவதற்கு சிறிலங்கா அரசால் முடியாமல் போய்விட்டதே இவ்வாறான நிலைக்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை அகதிகள் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ள ஐ. நா. ஆணையாளர் றொட்டிக்ஸ் பிலிப்ஸ் அகதிகளின் துயரங்கள் பற்றி விபரித்துக் கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வரி விளம்பரம்

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல பணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284 ஸ்ரான்லி வீதி. (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5588)

### தவறிவிட்டது

17-12-92இல் அ. பரமகுரு என்பவரின் வங்கி சம்பந்தப்பட்ட ஆவணங்கள் 7646 இலக்கமுடைய டஸ்ஸில் யாழ்ப்பாணம்—பருத்தித்துறை செல்லும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 750, மினிபஸ் சங்கம் நேரக் கணிப்பாளரிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (3879)

### மகாதேவா ஜோதிடம்

1993-ம் ஆண்டுப பல பலன் எங்கும் விற்பனையாகின்றது. நேரடியாகச் சந்திக்கலாம். காலை 9-00 மணியிலிருந்து. 140, செல்லர் வீதி, கல்வியங்காடு: நல்லூர். (3880)


## பண்டிதர் குடியிருப்பு ஓராண்டு பூர்த்தி

பண்டிதர் குடியிருப்பின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு தென்மராட்சி மட்டத்திலான ஏழுபேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்ட போட்டியும், ஆறுபேர் கொண்ட விலகல் முறையிலான கரபந்தாட்ட போட்டியும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் பங்குபற்றுவதற்கு விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் யாவும் டிசம்பர் முப்பத்தோராம் திகதிக்கு முன்பாக செற்பலி பண்டிதர் குடியிருப்பின் விளையாட்டுக் கழகச் செயலாளருக்கு விண்ணப்பிக்க வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# சர்வதேச மொழியாக தமிழ் விரைவில் அங்கீகாரம் பெறும்

—எம். எஸ். செல்லச்சாமி

(கொழும்பு)

சர்வதேச மொழிகளில் ஒன்றாக தமிழ் விரைவில் அங்கீகாரம் பெறும் என்று கைத்தொழில் துறை ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி கூறியுள்ளார் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் பொன் விழாக் கொண்டாட்டத்தை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்; பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் தமது இன்னுயிரை இழந்தும், இரத்தம் சிந்தியும், இன்னல் பட்டும் செய்த தியாகங்களின் பெறுபேறாகத்தான் இன்று இலங்கையில் தமிழ் தேசிய மொழியாக அங்கீகாரம் பெற்றது. இன்று உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் ஒன்று பட்டுழைத்து தமிழ் மொழியை ஒரு சர்வதேச மொழியாகத் தரம் உயர்த்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## நுவரெலியாவில் பனிமூட்டம்

நுவரெலியா மாவட்டத்தில் பனிப்புகார் மூடி இருப்பதாகவும் கடும் குளிர் நிலவுவதாகவும் கூறப்படுகிறது. இதனால் தேயிலைச் செடிகள் உட்பட உருளைக்கிழங்கு, பீற்றூட், கரட் போன்ற பல்வேறு விவசாயச் செய்கைகளும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காவலிலுள்ள பெண்களை விடுவிக்க கோரி மனு தாக்கல்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் வழக்கு விசாரணை எதுவுமின்றி நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நான்கு பெண்களை விடுதலை செய்யக் கோரிகொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நான்கு பெண்கள் கைது செய்யப்பட்டதும், தொடர்ந்து நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருப்பதும் சட்டவிரோதமானது. இச்செயல் அடிப்படை உரிமை மீறும் செயலாகும். எனவே உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று மேற்படி வழக்கில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நான்கு பெண்களில் ஒருவர் வவுனியா ஓமந்தையைச் சேர்ந்தவர். 34 வயதுடைய இவர் தனது கணவனை இழந்தவர். மூன்று பிள்ளைகளின் தாயான இவர் ஓமந்தையில் சிறிய உணவுக் கடை ஒன்றை நடாத்தி வந்தவர். கடந்த 21-4-91 இல் வவுனியா நகருக்குச் சென்று திரும்பும் சமயம் தாண்டிக்குளம் சோதனை நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

அன்று முதல் இப் பெண்மணியை பல இராணுவ முகாம்களுக்கும் அழைத்துச் சென்று பல தடவைகள் சித்திரவதை செய்யப்பட்டிருக்கிறார் சித்திரவதை காரணமாக நீண்ட நாட்களாக நோய் வாய்ப்பட்டிருந்தார்.

இவரிடம் பல புகைப்படங்கள் காண்பிக்கப்பட்டு புலிகளை அடையாளம் காட்டும்படி கோரப்பட்டார். வவுனியா ஜோசப் முகாமிலும், பொலிஸ் நிலையத்திலும் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று தெரியாத பல பத்திரங்களில் இவரிடமிருந்து ஒப்பங்கள் பெறப்பட்டிருக்கிறது.

கடந்த 3. 5. 91 இல் வவுனியா நீதிமன்றத்தில் இப் பெண் ஆஜர் செய்யப்பட்டார் அதன் பின்னர் பாதுகாப்புப் படையினருடன் ஒத்துழைக்கத் தவறும் பட்சத்தில் வாழ்நாள் முழுவதும் சிறையில் இருக்க வேண்டியிருக்கும் என்று படையினரால் பயமுறுத்தப்பட்டார். தற்பொழுது வெலிக்கடைச்சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

உயர் நீதிமன்றத்தில் இவர் தாக்கல் செய்த வழக்கை நீதியரசர்கள் விசாரணைக்காக ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் பிரதிவாதிகள் மார்ச்முதலாம் திகதிக்கு முன்னர் பதில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் நீதியரசர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

# டீசல் இல்லாமையால் செஞ்சிலுவைலொறிதரித்தது

(வவுனியா)

வவுனியா ஈரற்பெரியகுளத்தில் இராணுவத்தால் அனுமதிக்கப்பட்ட டீசலை லொறி தாங்கியில் செலுத்தி வந்த இலங்கை செஞ்சிலுவைச் சங்க லொறிஒன்று வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் டீசல் இல்லாமல் நிறுத்தப்பட்டது.

மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விடப்பட்ட டீசல், கிளிநொச்சிவரையும் லொறியைச் செலுத்திச் செல்லட போதவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பாரம் ஏற்றிய நிலையில் ஈரற்பெரியகுளம் வந்த மேற்படி லொறியின் பெருமளவிலான டீசல் இராணுவத்தால் பறிமுதல் செய்யப்பட்டதனாலேயே இந்த நிலை ஏற்பட்டது.

தென் பகுதியிலிருந்து வடபகுதி நோக்கி வரும் வாகனங்களில் எரிபொருள்களின் அளவை இராணுவம் சமீப நாட்களாக மட்டுப்படுத்தியே அனுப்பி வைக்கிறது இதனால் வாகனச் சாரதிகள் பெருஞ்சிரமத்திற்குள்ளாகின்றனர். (தி)

# உர வகைகள் மீது ராணுவம் தீவிர சோதனை

(வவுனியா)

வடபகுதி நோக்கி எடுத்து வரப்படும் உர வகைகள் முகாம் பகுதியில் வைத்து பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

## முத்திரை தட்டுப்பாடு

(வடமராட்சி)

பருத்தித்துறை தபாலகம் உபதபாலகங்களில் சகல தரப்பிலான முத்திரைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனியார் முத்திரை வியாபாரிகள் ஐந்து ரூபா முத்திரையை 6 ரூபா 50 சதமாக விற்பனை செய்கின்றனர். (யோ)

## ஒளி விழா

(வடமராட்சி)

வடமராட்சி பரியோவான் முதலுதவிப் படைப் பிரிவின் புலோலி தெற்கில் உள்ள தலைமைக் காரியாலயத்தில் இன்று 30 ஆம் திகதி வடமராட்சி பிரதேச ஆணையாளர் திரு. என். அனந்தராஜ் தலைமையில் காலை 9 30 மணியளவில் "ஒளி விழா" கொண்டாடப்படவுள்ளது தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (யோ)

## இராணுவத்தால் அதிபர் கைது

(வவுனியா)

வவுனியா பாடசாலை அதிபர் ஒருவரை இராணுவம் கைது செய்துள்ளது. இந்த அதிபர் தடை செய்யப்பட்ட பொருள்களை எடுத்து வந்தார் என்று இராணுவம் காரணம் கூறியுள்ளது.

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாமில் வைத்து இவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா பறநட்டகல் பாடசாலையைச் சேர்ந்த ஜோர்ஜ் என்ற அதிபரே கைது செய்யப்பட்டுள்ளார். (தி)

## திருவாசகம் முற்றோதுதல்

நல்லை திருஞானசம்பந்தர், ஆதீனத்தில், திருவாசகம் முற்றோதுதல் பூர்த்தி வைபவம் எதிர்வரும் ஞாயிறன்று காலை ஒன்பது மணியளவில் நடைபெறவுள்ளது. தினமும் மாலை மூன்று மணியளவில் திருவாதவூரர் புராணபடனம் நடைபெறவுள்ளது.


## 31-ம் நாள் நினைவுச்சுடரும் அந்தியேட்டி அழைப்பிதழும்




# சைக்கிளை திருடியவர் பணத்தை வீசிவிட்டு சென்றார்

(யாழ்ப்பாணம்)

சைக்கிளை திருடிய ஒருவர் அதில் வைக்கப்பட்டிருந்த பதினையாயிரம் ரூபா பணம் அடங்கிய பையொன்றை வீசிவிட்டுச் சென்ற சம்பவம் ஒன்று அரியாலையில் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது; அரியாலையில் தனது மகள் வீட்டு வாசலில் சைக்கிளை விட்டு விட்டு வீட்டுக்குள்சென்ற ஒருவர் சிறிது நேரத்தில் திரும்பிவந்து பார்த்தபோது சைக்கிள் மாயமாகமறைந்து விட்டதை அவதானித்தார்.

சிறிது தூரம் சென்று பார்த்த போது அவரது சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த பை வீசப்பட்டிருந்தது. பரபரப்புடன் அதனை எடுத்துப் பார்த்த போது அவர் அதற்குள் வைத்திருந்த பதினையாயிரம் ரூபா பணமும், பாணும் பத்திரமாக இருந்தன.

# உதைபந்தாட்டக் கழகங்கள் பதிவு செய்யக் கோரிக்கை

யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதைபந்தாட்டக் கழகங்களையும் யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சபையில் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக் கொள்கின்றது.

பதிவு செய்வதற்கான இறுதித் திகதி 10-01-1993 ஆகும். கழகங்கள் விண்ணப்ப படிவங்களை செயலாளர்கள் உதைபந்தாட்ட லீக், யாழ்ப்பாணம், செயலாளர் உதைபந்தாட்ட லீக் பருத்தித்துறை, யாழ் மாவட்டச் செயலகம் கோண்டாவில், யாழ். போதனா வைத்திய சாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

01-01-1993 தொடக்கம் புதிய விதி முறைகளுக்கு அமைவாகவே போட்டி ஆட்டங்கள் நடாத்தப்பட முடியும் யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சபையின் அனுமதியின்றிப் போட்டி ஆட்டங்கள் நடாத்துவது தவிர்க்கப்பட்டுள்ளது என்பதையும் யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு அறிவித்துள்ளது இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் யாழ். மாவட்ட அரசியல்துறை செயலகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும

தோற்றம்: 14 — 09 — 1920



மறைவு: 01 — 12 — 1992

### திரு. மலையில்மாணிக்கம் மகாலிங்கம்

01. 12. 92இல் இறைவனடி எய்தினார். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை நாளை 31 12. 92 வியாழக்கிழமை அதிகாலை 6. 00 மணிக்கு வீட்டுக் கிருத்தியம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

(தனிப்பட்ட அழைப்பு இல்லை)

திருமதி ம.கமலதேவியின்

காட்டுப்புலம், — மக்கள் -

தொண்டமானாறு. மனைவி, மக்கள்.

(3883)

பந்தாட்ட போட்டியும், ஆறு பேர் கொண்ட விலகல் முறையிலான கரபந்தாட்ட போட்டியும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் பங்குபற்றுவதற்கு விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் யாவும் டிசம்பர் முப்பத்தோராம் திகதிக்கு முன்பாக செற்பலி பண்டிதர் குடியிருப்பின் விளையாட்டுக் கழகச் செயலாளருக்கு விண்ணப்பிக்க வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

(வவுனியா)

வவுனியா ஈரற்பெரியகுளத்தில் இராணுவத்தால் அனுமதிக்கப்பட்ட டீசலை லொறி தாங்கியில் செலுத்தி வந்த இலங்கை செஞ்சிலுவைச் சங்க லொறியொன்று வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் டீசல் இல்லாமல் நிறுத்தப்பட்டது.

மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விடப்பட்ட டீசல், கிளிநொச்சிவரையும் லொறியைச் செலுத்திச் செல்லப்போதவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பாரம் ஏற்றிய நிலையில் ஈரற்பெரியகுளம் வந்த மேற்படி லொறியின் பெருமளவிலான டீசல் இராணுவத்தால் பறிமுதல் செய்யப்பட்டதனாலேயே இந்த நிலை ஏற்பட்டது.

தென் பகுதியிலிருந்து வட பகுதி நோக்கி வரும் வாகனங்களில் எரிபொருள்களின் அளவை இராணுவம் சமீப நாட்களாக மட்டுப்படுத்தியே அனுப்பி வைக்கிறது இதனால் வாகனச் சாரதிகள் பெரும்சிரமத்திற்குள்ளாகின்றனர். (தி)

ருக்கும் என்று படையினரால் பயமுறுத்தப்பட்டார். தற்பொழுது வெலிக்கடைச்சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

உயர் நீதிமன்றத்தில் இவர் தாக்கல் செய்த வழக்கை நீதியரசர்கள் விசாரணைக்காக ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். பிரதிவாதிகள் மார்ச்முதலாம் திகதிக்கு முன்னர் பதில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் நீதியரசர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

## திருவாசகம் முற்றோதுதல்

நல்லை திருஞானசம்பந்தர், ஆதீனத்தில், திருவாசகம் முற்றோதுதல் பூர்த்தி வைபவம் எதிர்வரும் ஞாயிறன்று காலை ஒன்பது மணியளவில் நடைபெறவுள்ளது. தினமும் மாலை மூன்று மணியளவில் திருவாதவூரர் புராணபடனம் நடைபெறவுள்ளது.



09 — 1920 — 12 — 1992

## திரு. மலையில்மாணிக்கம் மகாலிங்கம்

01. 12. 92இல் இறைவனடி எய்தினார். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை நாளை 31. 12. 92 வியாழக்கிழமை அதிகாலை 6.00 மணிக்கு வீட்டுக் கிருத்தியம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

(தனிப்பட்ட அழைப்பு இல்லை)

திருமதி ம.கமலதேவியின்<br>- மக்கள் -<br>மனைவி, மக்கள்.

காட்டுப்புலம்,<br>தொண்டமானாறு.

(3883)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்<br>இலங்கை<br>விவசாய பீடம்

விவசாய பீடத்தில் 1991/92 ஆம் கல்வியாண்டு 1993 01.04 அன்று ஆரம்பமாகும். புதிய மாணவர்களும் அன்று சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள். விடுதி வசதிகள் விவசாய பீடம், கிளிநொச்சியில் வழங்கப்படும்.

குறிப்பு: விவசாயபீட மாணவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி விவசாய பீடத்திற்கு செல்வதற்கு பயண ஒழுங்குகளில் இடையூறுகள் இருப்பின் இப்பல்கலைக்கழக பதிவாளருடன் 31.12.1992 ற்கு முதல் தொடர்பு கொள்ளவும்.

(சி-5674) -பதிவாளர்

## உர வகைகள் மீது இராணுவம் தீவிர சோதனை

(வவுனியா)

வடபகுதி நோக்கி எடுத்து வரப்படும் உர வகைகள் அனைத்தும் சிறிலங்கா இராணுவத்தால் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

சமீப நாட்களில் தென்பகுதியிலிருந்து வாகனங்களில் ஏற்றி எடுத்து வரப்படும் உர வகைகள் ஈரற்பெரியகுளம் இராணுவ சோதனை முகாம் பகுதியில் வைத்து பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

தம்மிடம் ஆய்வு கூடம் ஒன்று இருப்பதாகவும் தடை செய்யப்பட்டுள்ள யூரியா உரம் வடபகுதி நோக்கி எடுத்துச் செல்லப்படுவதை தடுக்கும் நோக்குடனேயே பரிசோதனைக்கு உர வகைகளை உட்படுத்துகிறோம் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (தி)

## வவுனியா கச்சேரியில் நிர்வாகச் சீர்கேடு


(வவுனியா)

வவுனியா கச்சேரி நிர்வாகத்தின் சீர்கேட்டினால் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தும் விநியோகத்திற்கு அறவே இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

உணவு முத்திரைக்குரிய பல இலட்சம் ரூபா பணத்தை பல மாதங்களாக வவுனியா செயலகம் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்திற்கு வழங்காமல் இழுத்தடிப்பதனால் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு கூட்டுறவுச் சங்கக் கிளைகள் அனைத்திலும் அத்தியாவசியப் பொருள்கள் ஒருமாத காலமாக இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அரிசி, மா, சீனி, மண்ணெண்ணையுடன் வேறும் பல முக்கிய பொருள்கள் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இல்லாத காரணத்தினால் பொது மக்கள் உணவு முத்திரை அட்டைகளை நாள்தோறும் கையில் ஏந்தியவண்ணம் அலைகின்றனர். (தி)

## 31-ம் நாள் நினைவுச்சுடரும் அந்தியேட்டி அழைப்பிதழும்



அமரர் உயர்திரு

## ஆறுமுகம் சுப்பிரமணியம்

(மணியம் கூல்பார் உரிமையாளர் பளை)

தோற்றம்: 31-01-1932 மறைவு: 30-11-1992

பாசத்தின் சிகரமே-எம்<br>பாதைக்கு ஆசானே<br>பண்பே உருவமாய்<br>பலரோடும் பழகினீர்

அன்பெனும் ஊற்றினில்<br>அமிழ்த்தியெமை வளர்த்தீர்<br>அனைவரும் அழுதிட<br>அணைந்தீரோ அகல்விளக்கு போல்

எமதாருயிர்த் தெய்வமே இனி<br>எப்போதுமைக் காண்போம்<br>உமதாத்மாவின் சாந்திக்கு<br>ஆண்டவனை வேண்டுகின்றோம்.

30-12-92 இன்று நண்பகல் பளை தபாற்கந்தோருக்கு அருகாமையில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெற உள்ள அந்தியேட்டி கிரியையிலும், மதிய போஷனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"யோகபவனம்",<br>தபாற்கந்தோரடி,<br>பளை. (3873)

இங்ஙனம்<br>பிரிவுத்துயரில் மூழ்கும்<br>குடும்பத்தினர்

## நினைவு கூருகின்றோம்...

**1992-12-30**

1984-ம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை- கல்முனைப்பகுதியில் சுவரொட்டி ஒட்டும் போது சிறிலங்கா காவற்றுறையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

மாறன் (நாகராஜா திருமாணன் - வன்னியார் வீதி, கல்முனை - 02- அம்பாறை)

1987-ம் ஆண்டு யாழ். பெரியவிளான் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

ராமு

காத்தான் குடிப்பகுதியில் 'ஜிகாத்' குழு மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

நசீர் (முகமட் நசீர் - காங்கேயன் ஓடை மட்டக்களப்பு)

தமிழீழக் கடற்பரப்பில் (காத்தான்குடி) படகுகளில் பயணித்துக் கொண்டிருந்த போது உலங்குவானூர்தியிலிருந்து இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 25- தமிழர்கள்.

1990-ம் ஆண்டு குப்பிளான் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

சாஜி [சாந்தி (அன்னம்மா) சின்னையா- ஆனந்தம் பண்ணை, 8-ம்வாய்க்கால் உருத்திரபுரம் கிழக்கு- கிளிநொச்சி]

1991-ம் ஆண்டு மட்டக்களப்பில் வீரச்சாவெய்திய-

கென்றி

ஆகியோரை இந்நாளில்<br>நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5670)

## காணவில்லை

பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் - நீர்வேலி, கரந்தன் மேற்கில் நாகமுத்து சங்கரப்பிள்ளை வீட்டில் தற்காலிகமாக வசித்தவருமான எஸ்தாக்கி பிரான்ஸிஸ்கா (குணவதி) கடந்த 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலையில் இருந்து காணவில்லை மணமாகாத 37- வயதுடைய மன நோயாளியான இவர் கடைசியாக வெள்ளையில் நாவல் நிறப்பூக்கள் போட்ட சேலையும் நாவல் நிற மேற்சட்டையும் அணிந்திருந்தார். 6அடி உயரமும் கறுப்பு நிற மெலிந்த தோற்றமுடைய இவரைக் கண்டவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு அறியத்தரவும்.

-நா. சங்கரப்பிள்ளை

கரந்தன் மேற்கு.<br>R.V.G பாம் அருகாமை<br>நீர்வேலி. (சி-5671)

**G.C.E O/L**

**பிரிவு 11**

**ஆரம்பம்**<br>**03. 01. 93**<br>மாலை 3.00 மணி<br>ஆண்டு 9, 10<br>வகுப்புகளும்<br>நடைபெறுகிறது.

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளச் சந்தி, யாழ்.<br>சி-5665

நல்லூர் [illegible]

சிந்தனைக்கு

நேற்று அசாத்தியமாய் இருந்தது, இன்று சாத்தியமாகும் அற்புதத்தை ஒவ்வொருநாளும்நாமகண்டுவருகின்றோம்.
-மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, மகேந்திரவீதி, யாழ்ப்பாணம்- 30- 12- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
க. பெ. எண் - 05

## தப்புக்கணக்கு

ஓர் போராளியின் அர்ப்பணிப்பு, தியாகம், மனவுறுதி என்பனவற்றுடன் ஓர் இராணுவ சிப்பாயின் நடவடிக்கைகளை ஒப்பிட முடியாது என்பது புதிய தொன்றல்ல. அதிலும், குறிப்பாக விடுதலைப்புலிகளின் தியாகம், அர்ப்பணிப்பு என்பவற்றுடன் உலகிலுள்ள எந்த விடுதலை இயக்கங்களின் தியாகம், அர்ப்பணிப்பு என்பவற்றுடன் ஒப்பிட முடியாத நிலையில் சிங்கள இராணுவசிப்பாயின் நடவடிக்கைகளை எவ்வாறு புலிகளுடன் ஒப்பிட்டுவிட முடியும்?

ஆனால் சிங்களப் பேரினவாதிகள் முன்னர் ஒருபோதும் இதனை விளங்கிக் கொள்ளவோ, அன்றி ஏற்றுக்கொள்ளவோ இல்லை. ஒவ்வொரு சிங்கள சிப்பாயும் சிங்களத் தேசத்தின் மீதுள்ள பற்றுதலினாலேயே போர்க்களம் செல்கின்றான் எனவும், நாட்டிற்காக தனது உயிரையே பணயம் வைக்கத் தயாராக இருக்கின்றான் என்றுமே எண்ணினர். இதனால் தமிழருக்கு எதிரான போரில், இராணுவத்திற்கு ஆளணிசேர்ப்பதென்பதும் பெரியதொரு விவகாரமாக இருக்கப்போவதில்லை என்றும் கருதியதோடு அவர்கள் புரியப்போகும் அர்ப்பணிப்புக்களினால் போரின் வெற்றியும் சுலபமானது என கருதியது.

ஆனால், தற்பொழுது நிலைமை மாறி குறிப்பிடத் தக்க அளவில் மாறியுள்ளது. சிங்கள பேரினவாத சக்திகள் சிங்கள சிப்பாய்கள் குறித்து சந்தேகிக்கத் தொடங்கியுள்ளனர், கடந்தவார ஐலண்ட்வார இதழ் ''சிங்கள இளைஞர்கள் வேலைவாய்ப்பிற்காகவே இராணுவத்தில் சேருகின்றனரே ஒழிய. தேசப்பற்றுக்காகவல்ல'' எனத் தனது ஆசிரியர் தலையங்கம் தீட்டியுள்ளது. மேலும், பொருளாதார லாபம் கிடைக்காத இடங்களில் தமது உயிரைப் பணயம் வைக்க இளைஞர்கள் தயாராக இல்லை" எனவும் தெரிவித்துள்ளது.

அதாவது சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் ஓர் கூலிப்பட்டாளமாகவே செயற்படுவதாக 'ஐலண்ட்' மறைமுகமாகச் சுட்டிக்காட்டியுள்ளது. ஆனால், இரண்டாம் ஈழப்போர் ஆரம்பித்தபோது காலிமுகத் திடலில் இராணுவத்தில் சேருவதற்காக சிங்கள இளைஞர்கள் காத்துக்கிடந்தபோது 'ஐலண்ட்' இவ்வாறு எண்ணவில்லை. ஒவ்வொரு சிங்கள இளைஞர்களையும் 'ஒரு துட்டகைமுனு' என்றே 'ஐலண்ட்' கருதியது.

# ஈழப் போரின் 11ஆவது ஆண்டின் நிறைவில் புலிகளின் பலம் மேலோங்கியுள்ளது

## ஆயுதங்களால் மட்டும் வெற்றிகிட்டாது; ஐலன்ட் விமர்சகர் சமிந்திர பெனன்டோ

தொடரும் ஈழப்போரில் 1992 ஆம் ஆண்டு குறிப்பிடக் கூடிய வகையில் இரண்டு முக்கியத்துவங்களை உள்ளடக்கியுள்ளது. மிகப் பிரமாண்டமான வெற்றிகளையும், நம்புதற்கரிய சாதனைகளையும் விடுதலைப்புலிகள் ஈட்டிய ஆண்டாகவும், வடக்கு, கிழக்கில் மட்டுமன்று கொழும்பிலும் தாக்குதல் நடத்தும் அவர்களின் வலிமையை வெளிப்படுத்தும் ஆண்டாகவும் இது இருந்துள்ளது.

இரண்டாவதாக பாதுகாப்பு படையின் உயர்மட்டத்தவர்களிடையே பலத்த கருத்து வேறுபாடுகளையும், முரண்பாடுகளையும் ஏற்படுத்திய ஆண்டாகவும் இது இருந்துவிட்டது. இராணுவம் மற்றும் ஆயுதப்படைகளின் உயர் மட்டத்தில் ஏற்பட்ட இந்த முரண்பாடுகள் போரின் போக்கில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

முரண்பாட்டின் இந்த வருடப் போக்கை கவனிக்கும் எவரும் விடுதலைப்புலிகள் மெதுவாக ஆனால் உறுதியாக முன்னேறி இராணுவத்தைவிட மேலோங்கிய நிலைக்கு ஈழப்போரின் பதினோராவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளனர் என்று அச்சம் கொள்ளத்தயங்கமாட்டார்.

எனவே தான் நாடு நிச்சயமாக ஒரு யுத்தகால சம்பவங்களை அனுபவங்களை எதிர்நோக்க வேண்டியது தவிர்க்க முடியாதது என்று ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர் இருதரப்பினரதும் தந்திரோபாயங்கள் மற்றும் ஆற்றல்கள் பற்றி ஆராயும் போது யுத்தம் சந்தேகத்திற்கிடமின்றி நீண்ட காலம் தொடரும் என்பதை இலகுவில் மதிப்பிட்டு விட முடியும்.

புலிகளைப் பொறுத்த வரையில் ஈழத்தை அடைவதற்கான இறுதிக்காலக்கெடுவையும் அவர்கள் கொண்டிருப்பதாக தெரியவில்லை. இராணுவ ரீதியாகவும், உளவியல் மற்றும் பொருளாதார, அரசியல் ரீதியாகவும் திட்டமிட்ட தயாரிப்புக்களை மேற்கொள்ளும் புலிகள் சிலசமயங்களில் அடுத்த வருடத்தின் தாக்குதல் இலக்கு எது என்பதைக் கூட தீர்மானித்து செயலாற்றுவதாகக் கூறப்படுகிறது.

அவர்கள் தாம் விரும்பியதைச் சாதித்துக் கொள்வதிலிருந்து எந்த சக்தியும் தடுத்துவிட முடியாத அளவுக்கு அவர்கள் தயாரிப்புகளை மேற்கொள்வதாக சில அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆனால் பாதுகாப்பு படையினரைப் பொறுத்தவரையில் பயனைக்காட்டக்கூடிய தந்திரோபாயத்தையே கடைப்பிடிக்க வேண்டிய நிலையிலேயே உள்ளனர் என்று கூறப்படுகிறது. பாதுகாப்பு படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கையின் பயனைக்காட்டுவதற்கு காலம் நிர்ணயிக்கப்படுகிறது. எவ்வாறாயினும் காலம் ஓடிக்கொண்டே இருப்பதாக அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

1992-ம் ஆண்டைப்பொறுத்தவரையில் மூன்று டசின் பாரிய தாக்குதல்களையும், பாதுகாப்பு நிறைந்த நகரப்பகுதிக்குள் புலிகளின் வெற்றிகரமான ஊடுருவல்களையும் கண்டிருக்கிறது. கடந்த வாரத்தில் ஒரு இராணுவ அதிகாரி குறிப்பிட்டதைப் போல புலிகள் அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் வகையில் திட்டமிட்ட தாக்குதல்களின் எண்ணிக்கையை இவ்வாண்டில் அதிகரித்திருப்பதாக தெரியவருகிறது; அவர் மேலும் கூறுகையில். கொழும்பில் புலிகளின் செயற்பாடுகள் இதனை புலப்படுத்த போதுமானதாகும் என்றார். இதே வேளை இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அதிகாரிகள் மேற்கொண்ட தப்பான கணிப்பீடுகளால் புலிகளின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருந்திருப்பதையும் கவனிக்க வேண்டும்.

வண்ணான்குளம் இராணுவ முகாம் மீது ஜூலை 11 இல் புலிகள் நடத்திய தாக்குதல் மிக முக்கியமானதாகும். இத் தாக்குதலில் 52 படையினர் கொல்லப்பட்டதோடு அங்கிருந்த ஆயுதங்கள், ரவைகள், தொடர்புசாதனங்கள் அனைத்தும் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டது. அயலிலிருந்த இராணுவத்தினர் உதவிக்கு விரைவதற்கு முன்பாகவே இந்த முகாம் முற்றாகத் தகர்க்கப்பட்டுவிட்டது.

77, 000 பேரைக் கொண்ட சிறிலங்கா இராணுவத்தின் தளபதியாக 91 நவம்பரில் பதவியேற்ற சிசில் வைத்தியரட்ணா சந்தித்த முதலாவது பெரும் இழப்பு இதுவாகும். அவரைத் தாக்குவதற்கு குறிபார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு இது பொருத்தமான சந்தர்ப்பமாக அமைந்தது.

இராணுவத்தின் முன்னணிக் காவலரண்கள் மீது ஊடுருவித் தாக்கும் உத்திகளைக் கையாண்டுபுலிகள் பலத்தசேதத்தை உண்டு பண்ணி வந்த போதும், இராணுவத்தினர் புலிகள் மீது அழுத்தம் பிரயோகிக்கக்கூடிய நிலையிலேயே இருந்தனர்.

ஆனால் ''பைனல் கவுண்ட் டவுண்'' இராணுவ நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு சுமார் 48 மணி நேரத்தின் முன்பாக அராலித்துறையில் ஆகஸ்ட் எட்டாம் திகதி நடைபெற்ற கண்ணிவெடி, நிலைமையை மாற்றியது.

எவ்வாறாயினும் புலிகள் சிறிலங்கா அரசின் உயர்மட்டத்தில் நடக்கும் உள்நாட்டு அரசியல் இழுபறி பற்றி கவலைப்படுவதாக இல்லை. அவர்கள் தமது நடவடிக்கைகளை தொடர்வதில் குறியாக உள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில்ஈடுபடுவதற்கு பணிக்கப்பட்ட ஊர்காவற்படையினர் 177 பேர் மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பணியிலிருந்து விலகுவதாக அறிவித்தனர். அராலித்துறை கண்ணிவெடிச் சம்பவத்துக்குப் பின்னர் மட்டும் சுமார் 1000 பேர் இராணுவத்தில்இருந்து விலகினர்.

இந்த வருடத்தில் போர் முனை நிலையில் பெரிதாக மாற்றம் எதுவுமில்லை. போர் முனையில் இருக்கும் படையினரும் பொலிசாரும் போதுமான வசதிகள் அற்ற நிலையிலேயே இன்னமும் உள்ளனர் பாதுகாப்புப்படையினர் திரும்பத் திரும்ப கேட்டுக்கொண்டதன் பேரில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை திருப்திகரமானதாக இல்லை.

அரசியல்வாதிகள் ஆடம்பர வாழ்வில் ஈடுபடும் அதே சமயம் சுமார் 1,86,000 பேரைக் கொண்ட பாதுகாப்புப் படையினரின் நலனைக் கவனிக்காதிருப்பதாகவே இப்போது பலரும் கருதுகின்றனர்.

இரு தரப்பிலும்பெரும்இழப்புக்கள் ஏற்பட்டுத்தான் உள்ளன. ஆனால் அரசுப் படைகள் யுத்த டாங்கிகளையும், கவச வாகனங்களையும், 130, எம். எம். ஏவுகணைகளையும் மற்றும் கனரக ஆயுதங்களையும் புலிகள் எதிர்ப்பு நடவடிக்கையின் போது பயன்படுத்தக் கூடியதாக உள்ளது.

மேலும் இந்த வருடத்தில் ரஷ்யாவின் எம். ஐ. 8 ரக உலங்கு வானூர்திகளும், ஆர்ஜென்ரீனாவின் புக்கரா தரைத்தாக்கு விமானங்களும், அதிவேக ரோந்துப் படகுகளும் புலிகள் எதிர்ப்பு போரிற்காக கொள்வனவு செய்யப்படவுள்ளது.

எப்படியிருப்பினும் புதுப் புது ரக ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதால் மட்டும் புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடிக்க முடியாது. தீர்மானகரமான அரசியல் தலைமை உறுதியாக நடவடிக்கை எடுத்தாலன்றி புலிகளை வெல்வது இயலாதது என்றே அவதானிகள் பலரும் கருதுகின்றனர். தவறான கணிப்பீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் முடிவுகளால் புலிகள் மேலும் பலம் பெறுவதற்குகே வழியேற்படும். அரசாங்கம் போரைத் தொடர்ந்து நடத்துவது குறித்து தனது அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்துவது புலிகளுக்கு மேலும் வாய்ப்பு அளிக்கும் என்றே நம்பப்படுகிறது.

நன்றி: ஐலன்ட்

# அமரர் எம். ஜி. ஆரின் நினைவுநாளில் அ.தி.மு.க. தொண்டர்களின் சபதம்

(சென்னை)

அமரர் எம். ஜி. ஆரின் ஐந்தாவது நினைவுநாளன்று சென்னையில் முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நடைபெற்ற பேரணியின் இறுதியில் அ. இ. அ. தி. மு. க. சபதம்

வதைத் தடுத்திட அண்ணாவின் இருமொழி கொள்கையினையே கடைப்பிடிப்போம்.

★ இந்திய ஒருமைப்பாட்டை பேணிக்காத்திடுவோம்.

★ பெண்கள் சம உரிமை பெற்று முன்னேறப் பாடுபடுவோம்.

★ மது அருந்தும் பழக்கத்தை அடியோடு ஒழிப்போம்.

# மக்கள் அனைவருக்கும் சமுகநீதி கிடைக்கச் செய்ய வேண்டும்

-வி. பி. சிங்

(சென்னை)

நாட்டில் அனைத்துப் பிரிவு மக்களுக்கும்குறிப்பாக தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சமூகநீதி கிடைக்கச் செய்ய வேண்டும் என்று முன்னாள் பிரதமர் வி.பி.சிங்,

வெளியான பின்பு அதன் முக்கியத்துவம் மேலும் பலரால் உணரப்படுவதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் மதச் சார்பற்ற சக்திகள் இணைந்து செயற்பட முன்வர வேண்டும்

ஆனால், தற்பொழுது நிலைமை மாறி குறிப்பிடத் தக்க அளவில் மாறியுள்ளது. சிங்கள பேரினவாத சக்திகள் சிங்கள சிப்பாய்கள் குறித்து சந்தேகிக்கத் தொடங்கியுள்ளனர், கடந்தவார ஐலண்ட்வார இதழ் ''சிங்கள இளைஞர்கள் வேலைவாய்ப்பிற்காகவே இராணுவத்தில் சேருகின்றனரே ஒழிய. தேசப்பற்றுக்காகவல்ல'' எனத் தனது ஆசிரியர் தலையங்கம் தீட்டியுள்ளது. மேலும், பொருளாதார லாபம் கிடைக்காத இடங்களில் தமது உயிரைப் பணயம் வைக்க இளைஞர்கள் தயாராக இல்லை" எனவும் தெரிவித்துள்ளது.

அதாவது சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் ஓர் கூலிப்பட்டாளமாகவே செயற்படுவதாக 'ஐலண்ட்' மறைமுகமாகச் சுட்டிக்காட்டியுள்ளது. ஆனால், இரண்டாம் ஈழப்போர் ஆரம்பித்தபோது காலிமுகத் திடலில் இராணுவத்தில் சேருவதற்காக சிங்கள இளைஞர்கள் காத்துக்கிடந்தபோது 'ஐலண்ட்' இவ்வாறு எண்ணவில்லை. ஒவ்வொரு சிங்கள இளைஞர்களையும் 'ஒரு துட்டகைமுனு' என்றே 'ஐலண்ட்' கருதியது.

ஆனால், அன்றுகாலிமுகத்திடலில் காத்துக்கிடந்தவர்கள் வேலையற்றுக் கிடந்த சிங்கள இளைஞர் பட்டாளமேயாகும் இவர்கள் கிராமத்தில் இருந்து வந்தவர்கள். இராணுவத்தில் சேருவதன் மூலம், தமதுபொருளாதார பிரச்சினைகள் தீர்ந்துபோகும் எனக் கருதியவர்கள். இவர்கள் போரின்கடுமையைப்பற்றியோ அதில் ஏற்படப் போகும் இழப்புக்களைப்பற்றியோ அறிந்திருக்கவில்லை.

ஆனால், இது தனித்துவமாக சிங்கள இராணுவத்தினருக்குமட்டும் உரியபண்பல்ல உலகிலுள்ள ஆக்கிரமிப்பு இராணுவங்களின் நிலைப்பாடுகள் யாவும் இத்தன்மை பொருந்தியவையே அவர்கள் தமது வளமான வாழ்க்கைக்குப் பொருள் தேடுவதே ஒழிய. இராணுவத்தில் இணைந்து தமது உயிரைப் பணயம் வைப்பதற்கல்ல, இதே வேளை மறுவளமாகக் கோரின் ஏன் அவர்கள் தமது உயிரைப் பணயம் வைக்கவும் வேண்டும்? அரசியல் வாதிகளின் அதிகாரப் போட்டிகளுக்காகவும் சுகபோகத்திற்காகவும் இவ் இளைஞர்கள் ஏன் தமது உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டும்?

ஒரு சமூகம் அடக்குமுறைக்கு எதிராகப் போராடும் போதே தியாகம் அர்ப்பணிப்பு என்பவற்றைச் செய்யமுடியும், தான் அழிந்தாலும், தனது எதிர்கால சந்ததியாவது சுதந்திரமாகவும், பாதுகாப்புடனும் வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கிலும், நம்பிக்கையிலும், அர்ப்பணிப்புக்கள் இடம் பெறுகின்றன. ஆனால், ஓர் சிப்பாய், தனது எதிர் காலவாழ்க்கை சிறப்புறுவதற்காகவும் தனது நெருக்கடிகளில் இருந்து விடுபடுவதற்காகவும் அல்லது தனது வெறியையும் இச்சையையும் தீர்த்துக்கொள்ளவுமே இராணுவத்தில் இணைந்து கொள்கிறான். இந்நிலையில் அவன் எவ்வாறு உயிரைப் பணயம் வைக்க முடியும்?

ஆனால், இவ் அடிப்படை உண்மையை உணர்ந்து கொள்ளாது சிங்களப் பேரினவாதம், விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்பிற்கு ஈடாக ஓர் சிப்பாயின் அர்ப்பணிப்பு இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது அவர்களின் அறியாமையே ஆகும்.

அதாவது ஒரு போராளிக்கும், சிப்பாய்க்கும் உள்ள உணர்வையே புரிந்து கொள்ளாமையே 'ஐலண்ட்' போன்ற பேரிவாதப் பத்திரிகைகளின் அங்கலாய்பிற்குக் காரணமாகும்.

எதிர்நோக்க வேண்டியது தவிர்க்க முடியாதது என்று ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர் இருதரப்பினரதும் தந்திரோபாயங்கள் மற்றும் ஆற்றல்கள் பற்றி ஒருத்தாராயும் போது யுத்தம் சந்தே

டுகின்றனர்.

1992-ம் ஆண்டைப்பொறுத்தவரையில் மூன்று டசின் பாரிய தாக்குதல்களையும், பாதுகாப்பு நிறைந்த நகரப்பகுதிக்குள் புலிகளின் வெற்றிகரமான ஊடுருவல்களையும்

பதவியேற்ற சிசில் வைத்தியரட்ணா சந்தித்த முதலாவது பெரும் இழப்பு இதுவாகும். அவரைத் தாக்குவதற்கு குறிபார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு இது பொருத்தமான சந்தர்ப்பமாக அமைந்தது.

இராணுவத்தின்முன்னணிக்

முனையில் இருக்கும் படையினரும் பொலிசாரும் போதுமான வசதிகள் அற்ற நிலையிலேயே இன்னமும் உள்ளனர் பாதுகாப்புப்படையினர் திரும்பத் திரும்ப கேட்டுக்கொண்டதன் பேரில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டா

வதற்குகே வழிவேற்படும். அரசாங்கம் போரைத் தொடர்ந்து நடத்துவது குறித்து தனது அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்துவது புலிகளுக்கு மேலும் வாய்ப்பு அளிக்கும் என்றே நம்பப்படுகிறது.

நன்றி: ஐலண்ட்

# அமரர் எம். ஜி. ஆரின் நினைவுநாளில் அ.தி.மு.க. தொண்டர்களின் சபதம்

(சென்னை)

அமரர் எம். ஜி. ஆரின் ஐந்தாவது நினைவுநாளன்று சென்னையில் முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நடைபெற்ற பேரணியின் இறுதியில் அ. இ. அ. தி. மு. க. சபதம் எடுத்துக் கொண்டது தெரிந்ததே. அண்ணாசாலையில் இருக்கும் அண்ணாசிலையடியில் இருந்து புறப்பட்ட இப்பேரணி சென்னை மெரினா கடற்கரையில் இருக்கும் எம். ஜி. ஆர். சமாதியை அடைந்த பின்னர் உறுதிமொழியை அமைச்சர் நெடுஞ்செழியன் வாசிக்க கூட்டத்தினரும் திரும்பக் கூறிச் சபதம் ஏற்றுக் கொண்டனர். இந்த உறுதிமொழியின் விபரம் வருமாறு:

★ இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கித் தந்த கொள்கை, குறிக்கோள்களை நிறைவேற்ற பாடுபடுவோம்.
★ அவர் கற்றுத் தந்த திராவிட இன உணர்வும் தமிழ் மொழிப் பற்றும், இந்திய நாட்டுப்பற்றும் மிக்கோராய் செயல்படுவோம்.
★ பேரறிஞர் அண்ணா அறிவுறுத்தியபுரட்சித்தலைவர் பின்பற்றிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காப்போம்.
★ அண்ணாவின் இதயக்கனியாம் புரட்சித் தலைவர் வழி நின்று அவர் புகழ் பரப்பும் புரட்சித்தலைவி வழி நடப்போம்.
★ சாதி, சமயமற்ற சமுதாய மறுமலர்ச்சி காணப்பாடுபடுவோம்.
★ ஏற்றத் தாழ்வற்ற எழுச்சி மிகு சமுதாயம் உருவாக உழைப்போம்.
★ உலகத் தமிழர் அனைவரும் உயர்ந்திட உறுதுணை புரிவோம்.
★ திராவிட நாகரிகம் தமிழர் பண்பாடு பேணிவளர்ப்போம்.
★ தாய்த் தமிழகத்தில் தமிழ் மொழி அனைத்து மத்திய மாநில அரசுத்துறைகளிலும் ஆட்சி செலுத்திட பாடுபடுவோம்.
★ இந்திமொழி திணிப்பால் தாய்த் தமிழ்மொழி அழிவதைத் தடுத்திட அண்ணாவின் இருமொழி கொள்கையினையே கடைப்பிடிப்போம்.
★ இந்திய ஒருமைப்பாட்டை பேணிக்காத்திடுவோம்.
★ அரசியலில் மக்களாட்சி முறை நிலைத்து நீடிக்கச் செலாற்றுவோம்.
★ மாநிலங்கள் அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் அதிக அதிகாரம் பெற பாடுபடுவோம்.
★ சாதி-சமய பேதத்தால் நாட்டில் வன்முறை பெருக அனுமதியோம்
★ பயங்கரவாதத்திற்கு துளியும் இடம் கொடுக்க மாட்டோம்
★ மத வெறியாலும் -- இன வெறியாலும் இந்திய ஒருமைப்பாட்டைச் சிதைத்திட அனுமதியோம்
★ தீண்டாமையை ஒழித்து சாதிக்கொடுமையை அகற்றுவோம்,
★ தாழ்த்தப்பட்டுள்ள மக்கள் சம அந்தஸ்து பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம்.
★ பெண்கள் சம உரிமை பெற்று முன்னேறப் பாடுபடுவோம்.
★ மது அருந்தும் பழக்கத்தை அடியோடு ஒழிப்போம்.
★ சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள விவசாயிகள், தொழிலாளர்கள் உரிமைகளைக் காப்போம்.
★ பின்தங்கிய மக்களின் உயர்விற்காக உழைப்போம்.
★ அரசியலில் நீதி, நேர்மை, நாணயம், ஒழுக்கம் நிலைத்திடப் பாடுபடுவோம்.
★ புரட்சித் தலைவரின் புகழ் பாடும் புரட்சித் தலைவியின் ஆட்சியை பெருமையுடன் நடத்திடுவோம்.
★ புரட்சித் தலைவியின் புகழ் பரப்பி அவர் வழியில் என்றும் நடப்போம்.

இந்தச் சபதம் ஏற்றதைத் தொடர்ந்து இடம்பெற்ற வைபவத்தில் ரூபா ஒன்றரைக் கோடி செலவில் மெரினா கடற்கரையில் அமைக்கப்பட்டிருக்கும் எம். ஜி. ஆர். சமாதி பொதுமக்கள் பார்வைக்காக திறந்துவிடப்பட்டது.

## கட்சியின் உள்விவகாரங்களில் பிறர் தலையீடு கூடாது

—ஜெயலலிதா

(சென்னை)

ஒரு கட்சியின் உள்விவகாரங்களில் மற்றொரு கட்சி தலையிடுவதோ அல்லது அதன் மீது கருத்துக் கூறுவதோ, விவாதம் நடத்துவதோ சரியல்ல என்று தமிழக முதல்வரும், அ. இ. அ. தி. மு. க. பொதுச் செயலருமான ஜெயலலிதா கூறியுள்ளார்.

அவர் சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் மேலும் சென்னையில் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்திற்கு பத்திரிகையாளர் எவரையும் அனுமதிக்கவில்லை எனவும், ஊகத்தின் அடிப்படையிலோ அல்லது காற்றுவாக்கில் கேட்ட செய்திகள் அடிப்படையிலோ விவாதம் நடத்துவது சரியல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கன்னியாகுமரியில் பிரதமருடனான சந்திப்பின்போது பொதுக்குழுக்கூட்ட விடயங்கள் பற்றி பேச்சுஎதுவும் நடத்தப்படவில்லை எனவும், இருதரப்பு நலன்கள் மற்றும் பொது விடயங்கள் பற்றியுமே பேச்சு நடத்தியதாகவும் குறிப்பிட்டார்.

பிரதமர் தமது கட்சியைப் பற்றி என்ன நினைக்கின்றார் என்பதற்கும் மாநில காங்கிரஸ்காரர்களின் அணுகுமுறைக்கும் இடையே எந்தச் சம்பந்தமும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மக்கள் அனைவருக்கும் சமூகநீதி கிடைக்கச் செய்ய வேண்டும்

—வி. பி. சிங்

(சென்னை)

நாட்டில் அனைத்துப் பிரிவு மக்களுக்கும்குறிப்பாக தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சமூகநீதி கிடைக்கச் செய்ய வேண்டும் என்று முன்னாள் பிரதமர் வி.பி.சிங், கூறியுள்ளார். திருச்சியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசுகையில் மண்டல் கமிஷன் பரிசுகள் பற்றி உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வெளியான பின்பு அதன் முக்கியத்துவம் மேலும் பலரால் உணரப்படுவதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் மதச் சார்பற்ற சக்திகள் இணைந்து செயற்பட முன்வர வேண்டும் என்ற பிரதமரின் அழைப்புக் குறித்து தமது கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் பேசி முடிவெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## பால ராமர் தரிசனம் மறுபரிசீலனைக்கு கோரிக்கை

அயோத்தியா பிரச்சினையில் பைசாபாத் நகர நிர்வாகத்தின் முடிவை மறு பரிசீலனை செய்யுமாறு மார்க்சிய கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், ஜனதாதளம் ஆகிய கட்சிகள் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளன.

பாலராமர் ஆலயத்தை தரிசிப்பதற்கு பொது மக்களை அனுமதிப்பதன் மூலம் இப்போதைய நிலைமை பதற்றம் ஏற்படுமெனவும் டிசம்பர் ஆறாம் திகதியன்றும் அதன் பின்பும் நடைபெற்ற நிகழ்ச்சிகளை நியாயப்படுத்துவதாகி விடுமெனவும் இந்த மூன்று கட்சிகளும் கூட்டாக விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளன.

## கொன்ட்ரா ஊழலில் சம்பந்தப்பட்டோருக்கு புஷ் மன்னிப்பு வழங்கினார் அறுவர் விடுதலையாகினர்

(வாஷிங்டன்)

ஈரானுக்கு ஆயுதங்கள் விநியோகித்ததாகக் கூறப்படும் கொன்ட்ரா ஊழலில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் அறுவருக்கு ஜனாதிபதி புஷ் மன்னிப்பு வழங்கியுள்ளார். அமெரிக்க அதிபராக ரொனால்ட் றீகன் பதவி வகித்த காலத்தில் நடைபெற்றதான இவ் ஊழலில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் பாதுகாப்பு அமைச்சர் கஸ்பர் பெயின் பேர்கர் உட்பட ஐந்து உயர் அதிகாரிகளுக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டு உள்ளது.

இந்த மன்னிப்பு வழங்கப்பட்டதன் மூலம் இந்த ஊழலில் புஷ்ஷும் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படுவது மேலும் சர்ச்சைக்குள்ளாகும் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை உயர் பதவியில் இருப்பவர்களின் நண்பர்கள் பாரதூரமான குற்றம் இழைத்தாலும்தப்பிக் கொள்ளமுடியும் என்பதையே இக் காட்டுவதாக விசேட வழக்குத் தொடுநரான லாறன்ஸ் வால்ற்குற்றம் சாட்டியிருக்கின்றார். மேலும் இந்த மன்னிப்பு சஞ்சலத்தை ஏற்படுத்தும் ஒன்றாக இருப்பதாக பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகக் கட்சித் தலைவர் டிக் கெபார்ட் கூறியுள்ளார்.

ஈரானுக்கு ஆயுதம் விநியோகித்து பெற்ற பணத்தின் மூலம் நிக்கரகுவா கிளர்ச்சிகாரர்களுக்கு அமெரிக்கா உதவியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இந்த ஊழலுடன் சம்பந்தப்பட்டதாகக் கூறி வெள்ளைமாளிகையின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர், முன்னாள் உதவி வெளிநாட்டமைச்சர், சி.ஐ.ஏயின் முன்னாள் அதிகாரிகள் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வந்தது தெரிந்ததே.

ஈழநாதம்

# இந்திய அமைதிப்படை நாட்டை காப்பாற்றியது

## -காமினி திசநாயக்கா

[காலி]

இந்திய சமாதானப் படை எமது நாட்டில் இருந்த சமயம் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராடி எமது நாட்டைக் காப்பாற்றியது இந்தியப் படையைத் திருப்பி அனுப்பிய செயல் வடக்கு - கிழக்கு யுத்தத்தின் வெற்றிக்குப் பெரும் தடையாக அமைந்துள்ளது என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உப தலைவர் காமினி திசநாயக்கா தெரிவித்தார்.

ஹிங்டும தொகுதியில் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

வடக்கு - கிழக்கு யுத்தத்தைப்பற்றிக் கருத்துக் கூறுகையில், ஒவ்வொரு நாளும் சிறிலங்காப் படையினர் கொல்லப்படுகிறார்கள். அரசு பதவியில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் யுத்தத்தை இழுத்தடிக்கிறது யுத்தம் போகிற போக்கினைப் பார்த்தால் வடக்கில் யுத்தத்தில் நாம் மண்கௌவுவது உறுதி. இன்று பிரபாகரனின் ஆட்சி தான் வடக்கில் நடக்கிறது என்றார் அவர்.

# சட்டவிரோதமாக வந்தவை படையினர் பாவனைக்கு

## -பிரதி சபாநாயகர் முயற்சி

(கொழும்பு)

சட்ட விரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் உடுபுடைவைகள் உட்பட பல பொருள்கள் பாதுகாப்புப் படையினரது பாவனைக்கு வழங்கப்படவிருக்கிறது.

இதற்கான முயற்சியில் பிரதிசபாநாயகர், பிரதமமந்திரி ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

தனியார் வர்த்தகர்களால் சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், படகு இயந்திரங்கள், பல ரக வாகனங்கள், உடுபுடைவைகள் ஆகியனவற்றை சுங்கத்திணைக்கள அதிகாரிகள் கொழும்புத் துறைமுகத்தில் வைத்து கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறான பொருள்கள் நீண்டகாலமாக கொழும்புத் துறை முகத்தில் தேங்கிக் கிடக்கிறது.

இப்பொருள்களை வடகிழக்குப் பகுதியில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பாதுகாப்புப் படையினரது பாவனைக்காக வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# "தமிழோசை" ஒளி நாடா வெளியீட்டு விழா

முல்லை மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய "தமிழோசை" வீடியோப்பட வெளியீட்டு விழா எதிர்வரும் 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்களின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். மாவட்டச் சிறப்புத் தளபதி திரு. தமிழ்ச்செல்வனும், மகளிர் படையணிச் சிறப்புத் தளபதி செல்வி ஜெனா அவர்களும் மங்கல விளக்கேற்றிச் சிறப்

தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் அவர்கள் கலைஞர்களுக்கு பாராட்டிப் பரிசளித்துக் கௌரவத்தை வழங்க, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. தேவர் அவர்களும், நிதர்சனம் பொறுப்பாளர் திரு. பரதன் அவர்களும். வன்னி மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பனோ அவர்களும் சிறப்புரைகளை வழங்குவர்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களான கலாநிதி சி. சிவலிங்கராசா அவர்களும், கலாநிதி. சோ. கிருஷ்ணராசா அவர்களும், ஆசிரியர்களான திரு. செம்பியன்

# நினைவஞ்சலி கூட்டம்

[யாழ்ப்பாணம்]

நவம்பர், டிசம்பர் மாதங்களில் வீரச்சாவடைந்த தீவகத்தைச் சேர்ந்த மாவீரர்களான லெப் சாந்தன், லெப். குமரன், வீரவேங்கைகள் ஆட்ஸ், சிறி ஆகியோரை நினைவு கூரும் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை வியாழக்கிழமை இரவு 7.30மணிக்கு யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும். விடுதலைப் புலிகளின் முக்கிய பிரதிநிதிகளின் நினைவுரைகளுடன் கலை நிகழ்ச்சிகளும் இக்கூட்டத்தில் இடம்பெறும். (22)

# அடுத்த வாரம் 'குமண' புறப்படும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் உணவுப் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் "குமண" கப்பல் அவற்றை இறக்கி முடிந்ததும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் கொழும்பு நோக்கிப் புறப்படும் எனத் தெரிய வருகின்றது.

# ஜனாதிபதி மாளிகை முன் ஆர்ப்பாட்டம் செய்த பெண்

[கொழும்பு]

கோட்டையிலுள்ள சிறிலங்கா ஜனாதிபதி மாளிகையின் முன் பதாதையுடன் கோசமிட்ட இத்தாலிய பெண் ஒருவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

இவர் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இவர் இத்தாலிய றடிகல் கட்சியின் அங்கத்தவர் எனவும் மனித உரிமை மீறல் தொடர்பான விசாரணையில் ஈடுபட இங்கு வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் சிலகாலம் தங்கிய பின் சென்றவாரமே இவர் இங்கு வந்தாரென விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

பின்னர் இவரை பொலிசார் நாடுதிரும்ப அனுமதித்த போதும் தனதுவேலை முடிந்த பின்பே தான் நாடுதிருப்பப் போவதாக அப் பெண் தெரிவித்துள்ளார்.

# குறித்த காலம் வரை தேர்தல் இல்லை

(கொழும்பு)

குறித்தகாலம்வரும் வரை ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட மாட்டாது எனசிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார். தனது பதவிக்காலம் 1994 டிசெம்பர் வரை நீடிக்கும் என்றும், எதிர்கட்சிகள் பலவீனமடைந்துள்ள நிலையில் தான் தேர்தலை நடத்த விரும்பவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### விமானங்கள்

கொள்வனவு செய்வதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது எனபேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாரிய

கரணங்களை மீட்டு வந்த போதிலும் சில மடி வலைகள்

# 'சிறிலங்காவில் இந்திய தலையீடு' வெளியீடு

[கொழும்பு]

"சிறிலங்காவில் இந்தியத் தலையீடு" [Indian intervention in Sri Lanka] என்ற நூல்

# 3வருடத்தில் அரசிற்கு எதிராய் 5,000 மனிதஉரிமைமீறல்மனு

(கொழும்பு)

1990 முதல் மூன்று வருடக் காலப் பகுதியில் அடிப்படை மனித உரிமைகள் மீறல் தொடர்பாக 5,000 மனுக்கள் கொழும்பு உச்ச நீதி மன்ற நீதியரசருக்குக் கிடைத்துள்ளன.

அவசர காலச் சட்டத்தின் கீழ் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக நாடு முழுவதிலுமிருந்து பிரதம நீதியரசருக்கு இவ் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாக உச்ச நீதிமன்றத்தின் பிரதிப் பணிப்பாளர் எம். ஏ. சிறில் தெரிவித்தார்.

1991 இல்3255 மனுக்களும், 1990 இல் 1415 மனுக்களும், இவ்வாண்டு ஆயிரத்துக்குமேற்பட்ட மனுக்கள் கிடைத்துள்ளதாகத்தெரிவித்த அவர், 1985-1989 காலப் பகுதியில் கிடைக்கப் பெற்ற மனுக்களின் எண்ணிக்கை 389 என்றார்.

நடப்பு ஆண்டில் 645 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா வழக்கறிஞர் சங்கத்தின் உப்புள் ஜெயசூரியா தெரிவித்தார். மேலும் 3015 மனுக்கள் தாக்கல் செய்வதற்காகப் பரிசீலனை நிலையில் உள்ளன என்று கூறிய அவர் உச்ச நீதி மன்ற தீர்ப்பு வழங்கிய 2475 வழக்குகளில் 83 வழங்குகளில் அரசு 5,33,000 ரூபா இழப்பீடு வழங்கியுள்ளது என்றார்.

தடுத்து வைக்கப்பட்டவர்கள் சார்பாக வழக்குத் தாக்கல் செய்ய ஏற்படும் செலவினங்களுக்காக சிறிலங்கா வழக்கறிஞர் சங்கத்துக்குக் கனேடிய அரசு இரு தவணைகளில் 2 756,651 ரூபா நிதி உதவி வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது

### கலந்துரையாடல்

வேலணை கோட்டத்திற்கு உட்பட்ட கல்வி வளர்ச்சிக் கழக ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10.00 மணிக்கு யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தில் தீவக கல்வி மேம்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு அரவிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

### உதைபந்தாட்டம்

வைத்திய கலாநிதி ஜே பி. சி. பிலிடஸ் ஞாபகார்த்த சபை கிறிஸ்மஸ் விழாவை முன்னிட்டு யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்தும் உதைபந்தாட்டப்போட்டி இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறும்.

குருநகர் பாடும் மீன் வி.க. எதிர்த்து நாவாந்துறைசென். நீக்கிலஸ் வி. கழகமும், பாசையூர் சென். அன்ரனிஸ் வி. க. எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் வி. கழகமும் விளையாடும். இரு ஆட்டங்கள் நிகழ்ச்சியில் இடம்பெறும். (21)

### நியமனக்

இன்று காலை ஒன்பது மணியளவில் வவுனியாகாமினி வித்தியாலயத்தில் நடைபெறும் வைபவம் ஒன்றில் வைத்து உத்தியோகபூர்வமாக இந்நியமனம் வழங்கப்படும். இதே போன்ற வைபவங்கள் திருக்கோணமலை மாவட்டத்தில் சென் மேரிஸ் கல்லூரியிலும், அம்பாறை மாவட்டத்தில்டி எஸ் சேனநாயக்காமகா வித்தியாலயத்திலும், மட்டக்களப்பில் சிசிலியா மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

### பட்டப்பின்

இரண்டு பேர் விசேட சித்தி


## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை நேற்றுக் (29-12-92) காலமானார்.

இவர் காலஞ்சென்ற திருமதி வேலுப்பிள்ளையின் அன்புக் கணவரும், ஆறுமுகத்தின் (முன்னாள் K. T. S. லொறி உரிமையாளர்) அன்புத் தந்தையும், மீனாட்சியின் அருமை மாமனாரும் Dr. கேதீஸ்வரன் (ஆதார வைத்தியசாலை, வவுனியா), பாஸ்கரி, சுப்பிரமணியம், (முகாமைத்துவத்துறை, 2-ம் வருடம், யாழ். பல்கலைக் கழகம்), கந்தசாமி (யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்), வசந்தா (ஆசிரியை), தவமணி - இரத்தின சிங்கம், ஈஸ்வரி - சற்குருநாதன் ஆகியோரின் அன்புப் பேரனும், உமாசசிரேகா, உமாகரன், வினோஜா, ஜனனி, ஜசீதன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை (30-12-92) காலை 9 00 மணிக்கு கரவெட்டி சோனப்பு மயானத்தில் இடம் பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


மணி வாசா, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

தகவல் வே. ஆறுமுகம் (மகன்)

[3411]

### துரையப்பா யோகேஸ்வரன்

(ஜேர்மனி)



## வெளியீட்டு விழா

முல்லை மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய "தமிழோசை" வீடியோப்பட வெளியீட்டு விழா எதிர்வரும் 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்களின் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ். மாவட்டச் சிறப்புத் தளபதி திரு. தமிழ்ச்செல்வனும், மகளிர் படையணிச் சிறப்புத் தளபதி செல்வி ஜெனா அவர்களும் மங்கல விளக்கேற்றிச் சிறப்பிக்கின்றனர். முல்லை மாவட்டக் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு சங்கர் வரவேற்புரையையும், முல்லை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு தமிழன்பன் அவர்கள் வெளியீட்டுரையையும் நிகழ்த்துகின்றார்கள்.

தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் அவர்கள் கலைஞர்களுக்கு பாராட்டிப் பரிசளித்துக் கௌரவத்தை வழங்க, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. தேவர் அவர்களும், நிதர்சனம் பொறுப்பாளர் திரு. பரதன் அவர்களும், வன்னி மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பனோ அவர்களும் சிறப்புரைகளை வழங்குவர்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களான கலாநிதி சி. சிவலிங்கராசா அவர்களும், கலாநிதி. சோ. கிருஷ்ணராசா அவர்களும், ஆசிரியர்களான திரு. செம்பியன் செல்வன், திரு. ந. அருணாசலம் ஆகியோரும் வீடியோப் படம் பற்றிய மதிப்புரைகளை வழங்குவர். படத்தின் இயக்குனரான திரு. தாசன் அவர்கள் பதிலுரை நிகழ்த்துவார்.


# தேவை

## கணணி (COMPUTER)

### I. B. M - Compatible P.C.

மேற்படி கொம்பியூட்டர் விற்பனைக்குவைத்திருப்போர் கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல:- 181
மே/பா. ஈழநாதம்
(சி/5673) யாழ்ப்பாணம்.


# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 29.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7368

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

24-2496, 28-3969, 42-0488, 26-3962, 26-8746, 28-1992, 27-5406, 28-2145, 26-4691, 41-5417, 24-5958, 26-6461, 24-0878, 24-5015, 26-2135, 26-1285, 27-2016, 24-7087, 24-5416

வட பகுதிக்கு வெளியேசென்ற வாகன இலக்கங்கள்:

27-9033, 40-1655, 26-1221, 27-4673, 24-2288


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# குறித்த காலம் வரை தேர்தல் இல்லை

(கொழும்பு)

குறித்தகாலம்வரும் வரை ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட மாட்டாது எனசிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார். தனது பதவிக் காலம் 1994 டிசெம்பர் வரை நீடிக்கும் என்றும், எதிர்கட்சிகள் பலவீனமடைந்துள்ள நிலையில் தான் தேர்தலை நடத்த விரும்பவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

விமானங்கள்

கொள்வனவு செய்வதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரிய

கரணங்களை மீட்டுவந்த போதிலும் சில மடி வலைகள் கடலில் கைவிட நேர்ந்தது.

கடந்த இரண்டு வருடங்களாக வடமராட்சி வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளாலும் கடலில் தொடர்ந்தும் ஏற்பட்டுவரும் கடற்படையினரின் மூர்க்கத்தனமான தாக்குதல்களினாலும் சுமார் ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் தமது சுய தொழிலை இழந்தும். கடந்த பல மாதங்களாக மீனவர்கள் நிவாரணத்தை இழந்த நிலையிலும் மீனவர் குடும்பங்கள் சீரான உணவு, உடை, உறக்கமின்றி பாதிப்படைந்த நிலையில் காணப்படுகின்றன.

(யோ)

ஆண்டு

தயாரிக்கப்பட்டுள்ளது.

கேட்டல், பேச்சு. வாசிப்பு என்று அமைந்திருந்த பழைய பாடத்திட்டம் முற்றாக மாற்றியமைக்கப்பட்டு மொழித்திறன் முன் செயற்பாடு என்ற அடிப்படையில் கேட்டல்-பேசுதல், பார்வை பிரித்தறிகை, உளவியக்கச் செயற்பாடு என்று அமைந்திருப்பது இதன் சிறப்பான அம்சமாகும்.

யாழ். குடாநாட்டில் சுமார் 450 பாடசாலைகளில் ஆண்டு ஒன்று வகுப்புகள் உள்ளன. ஆனால் நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலய ஆசிரியர் எஸ். செல்வரெட்னம், மூளாய் அமெரிக்க மிஷன் கலவன் பாடசாலை ஆசிரியை ப.முருகையா ஆகிய இருவருக்குமே கல்வி அமைச்சு இப்பாடதிட்ட ஆசிரியர் ஆலோசகராகப் பயிற்சி வழங்கியுள்ளது. ஜனவரி முதல் கிழமையில் பாடசாலைகள் முதலாம் தவணைக்கு ஆரம்பிக்கவுள்ள போதிலும் 450 பாடசாலைகளுக்கும் பொதுவாக இது வரை இரு பாடவிதானப் பிரதிகளே உத்தியோகப் பற்றற்ற முறையில் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

# 'சிறிலங்காவில் இந்திய தலையீடு' வெளியீடு

[கொழும்பு]

"சிறிலங்காவில் இந்தியத் தலையீடு" [Indian intervention in Sri Lanka] என்ற நூல் கொழும்பில் இவ் வாரம் வெளியாகியுள்ளது. இதன் நூலாசிரியர் றோகன் குணரெட்ணா ஆகும்.

1982 - 1992 காலப்பகுதியிலான இந்திய - சிறிலங்கா உறவுகள் பற்றிய கருத்துக்கள் இந் நூலில் இடம் பெற்றுள்ளன. ஒரு இனப்போரை ஒரு பயங்கர யுத்தமாக மாற்றிய இந்தியாவின் போக்குப் பற்றியும், அதனால் இந்தியாவின் தலையீட்டில் ஏற்பட்ட மாற்றங்களும் இந்நூலில் ஆராயப்படுகின்றன.

வீரச்சாவு

விபுலன் (வேலாயுதம் பரமேஸ்வரன் யூனிற் 02, கந்தளாய். திருமலை) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

★ ★ ★

24-12-92 அன்று மணலாறு கொக்குத்தொடுவாய், கோட்டைக்கேணி இராணுவ முகாமிலிருந்து வந்த இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் லெப்டினன்ட் விதூர்சன் (கதிரவேல் கவந்தீசன், அல்வாய் தெற்கு. அல்வாய்) வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

பஸ்

காயம் அடைந்துள்ளனர். பயணிகளை ஏற்றிவந்த பஸ் வண்டியொன்று பள்ளத்தினுள் பாய்ந்ததால் இவ்விபத்து நேரிட்டுள்ளது.

ஷெல்

ளான் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன எனத் தெரியவருகின்றது. இதனால் சேதம் எதுவும் ஏற்பட்டதாக தெரியவில்லை.

மேரிஸ் வி. கழகமும் விளையாடும். இரு ஆட்டங்கள் நிகழ்ச்சியில் இடம்பெறும். (21)

நியமனக்

இன்று காலை ஒன்பது மணியளவில் வவுனியா காமினி வித்தியாலயத்தில் நடைபெறும் வைபவம் ஒன்றில் வைத்து உத்தியோகபூர்வமாக இந்நியமனம் வழங்கப்படும். இதே போன்ற வைபவங்கள் திருக்கோணமலை மாவட்டத்தில் சென் மேரிஸ் கல்லூரியிலும், அம்பாறை மாவட்டத்தில் டி எஸ் சேனநாயக்கா மகா வித்தியாலயத்திலும், மட்டக்களப்பில் சிசிலியா மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

பட்டப்பின்

இரண்டு பேர் விசேட சித்தியையும் ஏழுபேர் திறமைச் சித்தியையும் ஐம்பத்திரண்டு பேர் சாதாரண சித்தியையும் பெற்றுள்ளனர். இதில் திருமதி ஆர். பாலசுப்பிரமணியம், திருமதி வி. முத்துக்குமாரசாமி ஆகியோர் விசேட சித்தியையும் திரு. எம். பாலசிங்கம், செல்வி எஸ் ஞானநாயகி, திரு என் மகேஸ்வரன். செல்வி தி. சங்கரப்பிள்ளை திரு. சந்திரகுமாரன், திருமதி கே சிவரட்ணம், திருமதி ஜி. கணேசலிங்கம் ஆகியோர் திறமைச் சித்தியையும் பெற்றுள்ளனர்.

சிங்களவரின்

ஆட்சியாளர்கள், குழுக்கள், (உ-ம்: திக்காருகுவே ஈரானஷா) சலுகைகள் வழங்குவதென்றால் அது கொள்கையை விற்பதற்குச் சமமாகும் என்றார். எதிர்ப்பியக்கங்களை அடக்கி ஒடுக்கினர். இதன் விளைவு அந்த அரசுகள் அழிக்கப்பட்டன என்றும்.

இதே போன்று தமிழ் கட்சிகளின் குறைந்த பட்ச கோரிக்கைக்கு நாம் விட்டுக் கொடுக்கத் தவறும் பட்சத்தில் விடுதலைப் புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு தேவையான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தவர்களாவோம் என்று குறிப்பிடுகிறார்.

தமிழ் கட்சிகளின் குறைந்த பட்ச கோரிக்கைக்கு விட்டுக் கொடுக்காமல் சிறிலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்தைத் தாக்குமானால் அதனை ஆக்கிரமிப்புப் படையாகக் கருதி தமிழ் மக்கள் எதிர்ப்பார்கள். புலிகளின் கையும் ஓங்கும். இன்றைய நிலையில் மேற்கத்திய நாடுகளில் தமிழ் அகதிகள் பெருமளவில் வாழ்வதால் ஐரோப்பிய நாடுகள் மாத்திரமல்ல தமிழ் நாடும் சும்மா பார்த்துக் கொண்டிராது ஐ நா. சபை இராணுவத் தலையீடு தவிர்க்க முடியாததாகி விடும் என்றும் அவர் தனது பத்தியில் குறிப்பிட்டுள்ளார்.



வடலியடைப்பு அரசடி வீதியைச் சேர்ந்த துரையப்பா யோகேஸ்வரன் 27ஆம் திகதியன்று ஜேர்மனியில் அகால மரணமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் பொன்னம்பலம் துரையப்பா - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், சுகேந்திரன், இராஜேஸ்வரன், கலாதேவி, சற்குணநாதன் (கனடா), பாஸ்கரன் (கனடா). இராஜினிதேவி ஆகியோரின் சகோதரரும், சாந்தி (சீமெந்து கூட்டுத்தாபனம்), நந்தகுமார் (இலங்கை வங்கி, கொழும்பு), ஆகியோரின் மைத்துனரும், தினேஸ், கோபிநாத், ஆகியோரின் சிறியதந்தையுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

அரசடி வீதி, வடலியடைப்பு. [3886] தகவல்: து. சுகேந்திரன்

# திருமதி இரத்தினம் பார்வதியம்மா

நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற இரத்தினப்பதியின் அன்பு மனைவி பார்வதியம்மா 29 - 12 - 92 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார். இவர் காலஞ்சென்ற சண்முகலிங்கம், புஸ்பவதி, மகாலிங்கம் (உ. கூ. ஸ்தாபனம்), தனபாலசிங்கம் (சவுதிஅரேபியா), தனலட்சுமி, ராஜகோபால் (பாரிஸ்) ஆகியோரின் தாயாரும், அருளானந்தம் (உ. கூ. ஸ்தாபனம்), நவரத்தினம் (உத்தரவு பெற்ற தட்டெழுத்தாளர்), தனலக்சுமி, மேனகா, லெக்சுமி ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 29 - 12. - 92 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் பளை மயானத்தில் தகனம் செய்யப்பட்டுள்ளது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நல்லூர். [சி-5675] தகவல்: அ. மதிவண்ணன்